**தேதி :** 28.04.2026 **SC.No. :** 443/2016 PW :3 குருசண்முகபிரியா

**(1ம் எதிரி ஆஜர். இதர எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

நான் முதல் விசாரணையில் கூறியுள்ளவாறுதான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். என்னுடைய வீடு காம்பவுன்ட் உள்ள வீடு என்றால் சரிதான். தலைவாசல் கேட் உள்ளது. சம்பவ நாள் , சம்பவ இடத்தில் என்னுடைய கணவரும், மாமாவும் சேர்ந்து இசக்கிபாண்டியன் வகையறாவை தாக்கி கொலை முயற்சி செய்ததாக sc.31/2014 என ஒரு வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அது பொய் வழக்கு. சம்பவம் நடந்த அன்று மாலை 6–7.00 மணியளவில் எனது வீட்டின் முன்பு சதீஸ் என்பவர் வீட்டில் ஆம்பளங்கள் இருக்காங்காளா என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எதிரி சிங்கத்துரை என் கணவரின் கழுத்தில் அருவாள் வைத்து நீ நகர்ந்தால் வெட்டி விடுவேன் என்று சொன்னதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எதிரி இசக்கிபாண்டி என் கணவரை பார்த்து செத்து ஒழி என்று சொன்னதாக நான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். எதிரி இசக்கிபாண்டியனின் மாமானார் சுப்பையா பாண்டியன் பெரிய கல்லை வைத்து எனது மாமானாரின் இடது நெற்றியில் அடித்தார் என்றால் சரிதான். எதிரி தங்கராஜ், சுப்பையாபாண்டி, குமார், சதீஸ், கணேசமூர்த்தி ஆகியோர்கள் சேர்ந்து என் வீட்டிற்கு எதிர் வீட்டு பக்கம் கடந்த தென்னை மட்டை மற்றும் பெரிய அளவில் ஜல்லி ஆகியவைகளை கொண்டு என் கணவரையும், மாமனாரை தாக்கியதாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எதிரி

ஆறுமுகச்சாமி என்பவர் என் மாமனாரை என் வீட்டின் கேட்டில் சாயவைத்துக்கொண்டு கையால் நெஞ்சில் பலமுறை குத்தினார் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆறுமுகச்சாமி என்னை ஏட்டி தேமுண்டை உன் வேலையை மட்டும் பார்த்துக்கிட்டு போ நீ இங்கிருந்தால் உன்னையும் அடித்து கொன்றுவிடுவேன் என்று மிரட்டினார் என்று போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எதிரி தங்கராஜ், சுப்பையாபாண்டியன் சம்பவம் நடக்கும் போது எதிர் வீட்டில் இருக்கும் சீதாலட்சுமி, வடிவு ஆகியோர்கள் அடிக்காதீர்கள் இதெல்லாம் தப்பு என தடுக்க வந்ததாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான், சீதாலட்சுமி, தமிழ் ஆகியோர் என் மாமனாரை தண்ணீர் தெளித்து எழுப்பிவிட்டோம் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தங்கபாண்டியனும், முகேஷ் இருவரும் இருசக்கர வாகனத்தில் மருத்தவமனைக்கு சென்றார்கள் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் சொன்ன நாள், சொன்ன நேரத்தில் சொன்னபடி எந்த சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், எதிரி என் கணவரையும், மாமனாரையும் தாக்கவும் இல்லை என்றாலும், அவரை கொலை செய்ய முயற்சி செய்யவில்லை என்றாலும், என் கணவரும், மாமனாரும் சேர்ந்து எதிரி இசக்கிபாண்டி வகையறாவை தாக்கி கொலை முயற்சித்தார்கள் என்றாலும், அதில் இருந்து தப்பிப்பதற்காக வேண்டி பொய் புகார் கொடுத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.05.04 11:54:01 +0530